# புத்தகம் வாங்குவோம் படிப்போம்

**வளர்நிலை 10**

மனிதனின் மிக உன்னதமான கண்டுபிடிப்பு புத்தகம் என்றார் மகாத்மாகாந்தி. அந்தக்கண்டுபிடிப்புத்தான் சாதாரண மோகனதாஸ் காந்தியை மகாத்துமா காந்தி ஆக்கியது.

பேரறிஞர்கள், அறிவியலாளர்கள், படைப்பாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், கல்வியாளர்கள் என மேன்மக்கள் பலரையும் உருவாக்கியதும் அந்தக்கண்டுபிடிப்புத்தான். நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குகைச்சுவரில், களிமண் பட்டையில், ஆட்டுத்தோலில், பனைஓலையில் தொடங்கி இன்று தாளில், மின் ஏடுகளில் வடிக்கப்பெற்ற புத்தகம்தான் அந்த அரும்பெரும் கண்டுபிடிப்பு.

என்றோ வாழ்ந்த மாமனிதர்களின் சிந்தனைகளை, போதனைகளை எல்லாம் இன்றும் நம்கண்முன் நிறுத்தும் இந்த ஒப்பற்ற கண்டுபிடிப்புத்தான் புத்தகம் என்னும் நூல்.

“நூலினும் சிறந்த நண்பன் இவன்” என்றான் மனிதப்புனிதன் ஆபிரகாம்லிங்கன். வாழ்வில் போதும் என நொந்து புதிய வாழ்வைத் தேடுகிறீர்களா? ஒருபுதிய நூலை வாசிக்கத் தொடங்குங்கள் என்பார் அறிஞர்கள்.

பழம்பெரும் ஞானியர்களை நேரில் தரிசித்து, கலந்துரையாட நான் நூலகம் செல்வேன் என்றார் மா சே துங். புரட்சிக்களத்தில் துப்பாக்கியை விடப் பெரிய ஆயுதம் புத்தகமே என்றான் மாவீரன் லெனின்.

மகத்தான வாழ்க்கைக்குப் புத்தகங்களைப் படிப்பதே மிகப்பெரிய திறவுகோல், பயனுள்ள ஒன்றைப்படிப்பதன் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும். சுயமுன்னேற்றத்திற்குச் சுலபமான வழி நாளும் வாசிப்பதே ஆகும்.

புத்தகம் இல்லாத வீடு சாளரம் இல்லாத வீட்டுக்குச் சமன் என்பார்கள். உறவினர், நண்பர் பலரின் தொடர்பை விட தேர்ந்தெடுத்த சில நூல்களின் உறவு பெரும் பயனளிக்கும். உன்னை மேன்மையுறச் செய்யும் என்றார் சீனத்து ஞானி செங் கௌ.

கண்டதைக் கற்க பண்டிதன் ஆவான் என்பர். அதற்குக் காலமும், நேரமும் போதா, ஆனால் தேர்தெடுத்த கற்கத்தகுந்த நூல்களைக் கற்பவனே மேன்மையுறுவான். நல்ல விதை விதைத்தால் நல்ல செடி வளரும். நல்ல நூல்களைப் படிப்பது நல்ல வித்துகளை நாமே நமக்குள் விதைத்துக் கொள்வதை ஒத்தது.

உடல்பயிற்சி உடலைப் பேணும், நூல் படிப்பு உள்ளத்தை வளப்படுத்தும். சில நூல்கள் உணவைப் போல் சுவைக்கத்தக்கவை. சில அப்படியே விழுங்கத்தக்கவை. மற்றும் சில மென்று சீரணிக்கத்தக்கவை என்பார்கள். "நூலறிவே ஆகும் நுண் அறிவு" என்பது நம்முதுமொழி.

படித்தல் என்பது செழுமையின் அணிகலன், முதுமையின் முன்னேற்பாடு என்றார் அறிஞர் அரிஸ்டோட்டில். நூலுக்குச் செலவிடுதல் ஒரு செலவன்று அது முதலீடு, அந்த முதலீட்டுக்கு நிச்சயம் சிறந்த வருவாய் உண்டு. நாம் நமக்காக வேண்டும் புத்தகங்களைத் தொடர்ந்து இடைவிடாது படிப்போம்.

**நன்றி, வணக்கம்!**